# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081691

1. District மாவட்டம் : Kanyakumari | PS: காவல்நிலையம் V&AC Nagercoil | Year ஆண்டு: 2021 | FIR No. மு.த.அ. எண் 8/2021 | Date நாள் 30.10.202

2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 102 and 7 of the P.C Act 1988 (Amended in 16/20

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: The PC Act 1988 (Amended in 16/2018) — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 29.10.2021 — Date to : நாள் வரை 30.10.2021

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.45 hrs — Time நேரம் :04.15 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.10.2021 — Time நேரம் :16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — About 30 Kms west, RTO Office Marthandam

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.Rajesh — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Tr.T.Thangaperumal

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.04.1978 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Spl/Tahsildar, ADW, Nagercoil Division — (g) Address : முகவரி Nagercoil, Kanyakumari District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tmt.V.PadmaPriya, MVI Gr-1, RTO Office Marthandam 2.Tmt.S.Vijayalekshmi, PA to RTO, Marthandam, 3. Tr.John Louis. Age-48, S/o John, 4. J.Anto Sahaya Jebin age-31, S/o Jesudasan, 5. Tr.Senthil, Valaithottam , Palliyadi 6.Tr.Vadivel, Amsi, Thengaipattinam, 7. Tr.John Rajarethinam, Kozhipourviali., 8. Tr.Selvam S/o Gnanavesuwasam, Kandanvilai.9. Tr. Madhan S/o Simon, Vaithiyanathapuram, Kottar, 10. Tr.Dinesh Koottumangalam**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Nil

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Accused:
(1)Tmt.V.PadmaPriya, MVI Gr-1, RTO Office Marthandam.(2) Tmt.S.Vijayalekshmi, PA to RTO, Marthandam
(3)Tr.John Louis. Age-48, S/o John, 162, Ponnappa Nadar Colony, Nagercoil. (4)J.Anto Sahaya Jebin age-31, S/o Jesudasan, Punnai Nager Nagercoil.(RTO office Broker) (5)Tr.Senthil, Valathottam, Palliyadi (RTO office Broker) (6)Tr.Vadivel Amsi,Thengaipattinam.(RTO office Broker) (7)Tr.John age-45,S/o Rajarethinam, Kozhipour-viali.(RTO office Broker) (8) Tr.Selvam, S/o Gnanavesu-wasam, Kandanvilai.(RTO office Broker)
9.Tr. Madhan age-32, S/o simon, Vaithiyanathapuram, Kottar (RTO office Broker)
10.Tr.Dinesh age-39, S/o Subramaniyapillai, Koottumangalam (RTO office Broker)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 30.10.2021-ம் தேதி மதியம் 03.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், S.பீட்டர் பால் துரை ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு. T.ராஜேஸ், தனிவட்டாசியர் ஆதிதிராவிடர் நலம் நாகர்கோவில் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள்.29.10.2021, Rs.1,86,610/-, முத்திரைகள் மற்றும் ஆவணங்கள் இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:. அனுப்புநர் திரு.T.ராஜேஸ், தனிவட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலம் நாகர்கோவில்.பெறுநர் திரு.S.பீட்டர் பால் துரைகாவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு; நாகர்கோவில்.அய்யா,பொருள்:கன்னியாகுமரி மாவட்டம் - மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலகம் திடீர் மேலாய்வு- வழக்கு பதிவு செய்து - மேல் நடவடிக்கை எடுப்பது சம்மந்தமாக.29.10.2021-ம் தேதி நான் அலுவலகப் பணியில் இருக்கும் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடமிருந்து அலைபேசி மூலம் கிடைக்கப்பெற்ற உத்தரவின்படி நான் காலை சுமார் 11.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை கன்னியாகுமரி பிரிவு நாகர்கோவில் அலுவலகத்திற்கு வந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் வரும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ......... திருமதி.T.T.Rema பதவி ......... காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T. Raju 30/10/21

Peter 30.10.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2021

Name: பெயர் ........ S.பீட்டர் பால் துரை,
Rank: நிலை ........ No. எண் ........
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊ.த.க பிரிவு,

<u>முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-</u>

வாகன உரிமையாளர்களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்து கொடுக்க புரோக்கர் மூலமாக வாகன ஆய்வாளர் திருமதி. பத்மபிரியா மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.விஜெயலெட்சுமி ஆகியோர்கள் லஞ்சம் வசூல் பெற்று வருவதாகவும், அந்த லஞ்சப்பணம் மற்றும் RTO அலுவலக கோப்புகள் RTO அலுவலகத்தின் அருகிலுள்ள கட்டிடங்களில் உள்ள RTO அலுவலக பணிகளை செய்து கொடுக்கும் புரோக்கர்களின் அலுவலகங்களில் இருப்பதாகவும் கிடைத்த இரகசிய தகவலின்படி RTO அலுவலகத்தையும் புரோக்கர்கள் அலுவலகத்தினையும் திடீர் இணை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டு கொண்டதற்கிணங்க நானும், ஊழல் தடுப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.பீட்டர் பால் துரை, ஆய்வாளர்கள் திரு.ஜாண் பெஞ்சமின் மற்றும் திருமதி.சிவசங்கரி ஆகியோருடன் போலீஸ் பார்டி சகிதம் மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு அருகாமையில் மதியம் சுமார் 14.15 மணியளவில் மறைவாக இருந்து கண்காணித்து பின்பு மதியம் 14.45 மணிக்கு மார்த்தாண்டம் வட்டார போக்கு வரத்து அலுவலர் அலுவலகத்திற்குள் சென்று அங்கு பணியில் இருந்த வட்டார போக்கு வரத்து அலுவலரின் நேர்முக உதவியாளரிடம் வட்டார போக்கு வரத்து அலுவலரை பற்றி கேட்டபோது அவர் மருத்துவ விடுப்பில் இருப்பதால் அந்த இடம் காலி இடமாக இருப்பதாகவும் தற்போது தூத்துக்குடி மாவட்ட வட்டார போக்கு வரத்து அலுவலர் திரு.S.விநாயகம் அவர்கள் பொறுப்பு வட்டார போக்குவரத்து அலுவலராக இருப்பதாகவும், அவர் இன்று இங்கு வரவில்லை என்றும் தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளரை பற்றி கேட்டப் போது அவர் களப்பணியில் இருப்பதாக தெரிவித்தார் அவரை அலுவலகம் வர தகவல் தெரிவித்து அதனை தொடர்ந்து நேர்முக உதவியாளரை சோதனை செய்தபோது அவரிடம் கைப்பையில் ரூ 600/- இருந்தது. கணக்கர் அறையில் இருந்த கணக்காளர் திரு.S.சிவன் ஆறுமுகம் என்பவரை சோதனை செய்தபோது ரூ.680/- இருந்தது. அதனை தொடர்ந்து திரு. குருசாமி என்பவரை சோதனை செய்த போது ரூ.1200/- இருந்தது. அதனை தொடர்ந்து B1 இருக்கையின் பணியாளர் திருமதி. கிறிஸ்டின் சுதா என்பவரை சோதனை செய்தபோது ரூ.650/- இருந்தது. அதனை தொடர்ந்து A பிரிவு உதவியாளர் திரு.S.ராஜதுரை என்பவரை சோதனை செய்தபோது ரூ.1120/- இருந்தது. இவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து போட்டோ பிரிவில் இருந்த திரு.ஜாண்லூயிஸ், திரு.ராஜகுமார் மற்றும் திருமதி. அபிஷா ஆகியோர்களை சோதனை செய்ததில் திரு.ஜாண்லூயிஸ் என்பவரிடம் கணக்கு காட்ட முடியாமல் வைத்திருந்த ரூ.3,150/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்து தகவலின் பேரில் அலுவலகம் வந்த மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் அவரது அறையை சோதனை செய்த போது அவரிடமோ அவரது அலுவலகத்திலோ பணம் ஏதும் கைப்பற்றபடவில்லை அதனை தொடர்ந்து ஏற்கனவே கிடைத்த இரகசிய தகவலின் படி RTO அலுவலகத்தின் பக்கத்தில் RTO அலுவலக பணிகளை செய்து கொடுக்கும் புரோக்கர்களாக செயல்பட்டு அலுவலகம் நடத்திவரும் அலுவலக உரிமையாளர் திரு. ஆன்றோ சகாய ஜெபின் என்பவரின் அலுவலகத்தினை சோதனை செய்த போது கணக்கில் வராத ரூ.31,500/-ம், RTO அலுவலக ஆவணங்களும் மற்றும் RTO அலுவலகத்தில் பயன்படுத்தும் முத்திரைகளும் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து செந்தில் என்பவர் அலுவலகத்தினை சோதனை செய்த போது கணக்கு காட்டாத தொகை ரூ. 34,500/-ம், RTO அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் முத்திரையும் RTO அலுவலக ஆவணங்களும் இருந்ததால் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து வடிவேல் என்பருக்கு சொந்தமான அலுவலகத்தினை சோதனை செய்த போது RTO அலுவலகத்தில் பயன்படுத்தும் முத்திரையும், RTO அலுவலகத்தின் ஆவணங்களும் காணப்பட்டதால் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து ஜாண் என்பவருக்கு சொந்தமான

அலுவலகத்தினை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத தொகை ரூ.16,600/-ம், மற்றும் RTO அலுவலக ஆவணங்களும் இருந்ததால் அதையும் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து திரு.செல்வம் என்பவரின் அலுவலகத்தினை சோதனை செய்த போது RTO அலுவலக ஆவணங்கள் இருந்ததால் அதையும் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து மதன் என்பவரின் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரூ. 42,900/-ம், மற்றும் RTO அலுவலக முத்திரை மற்றும் RTO அலுவலக் ஆவணங்களும் இருந்ததால் அதுவும் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தினேஷ் என்பருக்கு சொந்தமான அலுவலகத்தில் சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரூ.57,960/-ம், மற்றும் RTO அலுவலக முத்திரை மற்றும் RTO அலுவலக ஆவணங்களும் இருந்ததால் அதுவும் கைப்பற்றப்பட்டது. RTO அலுவலக வளாகத்திற்கு வெளியே செயல்பட்டு வந்த மேற்படி RTO அலுவலக வேலைகளை செய்து வரும் புரோக்கர் அலுவலகங்களில் மார்த்தாண்டம் RTO அலுவலக ஆவணங்கள் மற்றும் முத்திரைகள் பயன்படுத்தப்பட்டு வந்ததாலும் ஏற்கனவே கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலும் மேற்படி புரோக்கர் அலுவலகங்களின் உரிமையாளர்கள் RTO அலுவலக அதிகாரிகள் திருமதி. V.பத்மபிரியா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I மற்றும் RTO-ன் நேர்முக உதவியாளர் திருமதி. விஜயலெட்சுமி ஆகியோர்களுக்கு புரோக்கர்களாக செயல்பட்டு வசூல் செய்து அவர்களது அலுவலகத்தில் வைத்திருந்த பணம் லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்பதால் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,86,610/-ம் RTO அலுவலக அசல் ஆவணங்கள் மற்றும் RTO அலுவலகத்தில் பயன்படுத்தும் முத்திரைகள் ஆகியவற்றினை தக்க மேல்நடவடிக்கைகாக எனது புகார் மனுவுடன் தங்களுக்கு சமர்பிக்கிறேன். திரு.T.ராஜேஸ், தனிவட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலம் நாகர்கோவில். Sir, Received a complaint on 30.10.2021 at 15.00 hrs and registered a case in Kanyakumari Detachment Nagercoil V&AC Crime No:8/2021 u/s 102 CrPC and 7 of PC act 1988 (as amended 16/2018)S/d 30.10.2021 DSP V&AC, Nagercoil. சிறப்பு வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலத்துறை, நாகர்கோவில் கோட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை 29-10-2021- ம் தேதி பிற்பகல் 14.45 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம், முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு .முன்னிலை: திரு.T.ராஜேஷ், சிறப்பு வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலத்துறை, நாகர்கோவில் கோட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.1) திரு.S.பீட்டர் பால் துரை, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி மாவட்டம் @ நாகர்கோவில். 3) திரு.S. ஜாண் பெஞ்சமின், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு @ நாகர்கோவில். 4) திருமதி.C. சிவசங்கரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு @ நாகர்கோவில். கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.பத்மபிரியா மற்றும் அலுவலக பணியாளர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர்களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்ய புரோக்கர் மூலம் லஞ்சம் பெற்று வருவதாகவும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவகத்தின் ஆவணங்கள், முத்திரைகள், புரோக்கர்கள் மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கு கொடுக்க வசூல் செய்து வைத்துள்ள லஞ்ச பணம் மற்றும் RTO அலுவலக கோப்புகளும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அருகிலுள்ள கட்டிடங்களில் உள்ள புரோக்கர்களின் அலுவலகத்தில் இருப்பதாக கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் இன்று 29.10.2021-ம் தேதி மதியம் சுமார் 14.45 மணிக்கு முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து திடீர் சோதனை செய்யப்பட்டது. மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின்

தென்மேற்கு ஓரத்தில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. அதை தொடர்ந்து கிழக்கு பக்கம் இருந்த அலுவலக அறையில் வட்டார போக்குவரத்து அலுவலகரின் நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலெட்சுமி கிழக்கு பார்த்து அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் ஆய்வாளரை விசாரித்த போது மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் பணியிடம் காலியாக உள்ளதாகவும், தூத்துகுடி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.S. விநாயகம் அவர்கள் பொறுப்பு போக்குவரத்து அலுவலராக இருப்பதாகவும், இன்று அலுவலகத்திற்கு வரவில்லை எனவும் தெரிவித்தார். மேலும் வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.பத்மபிரியா அவர்கள் இன்றைய வட்டார போக்குவரத்து அலுவலக பணிகளை முடித்து கொண்டு பாறைகுளம் என்ற இடத்தில் மினி பஸ் அனுமதி சீட்டுக்கு புறம்பாக இயங்குவது சம்மந்தமாக வந்த புகாரின் அடிப்படையில் ஆய்வுக்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். அவரது அலுவலக அறை சாவி அவரிடமே உள்ளதாக தெரிவித்தார். இதை தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலகரின் நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலெட்சுமி அவர்களின் அலைபேசி மூலம் மோட்டார் வாகன ஆய்வாளரை அலுவலகம் வர அறிவுறுத்தபட்டது. வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் வெளிநபர்கள் யாரும் காணப்படவில்லை. பின்பு அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேடு, வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு, Bonton company ஒப்பந்த அலுவலர்கள் வருகைப்பதிவேடு, இன்றைய Online Collection Report மற்றும் கொடிநாள் பதிவேடு ஆகியவற்றை கணக்கர் திரு.S.சிவனாறுமுகம் அவர்களிடமிருந்து பெறப்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலக வருகைப்பதிவேட்டை பார்வையிட்டதில் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலட்சுமி, 2) திருமதி.V.பத்மபிரியா, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1. 3) திரு.S.சிவனாறுமுகம், கணக்கர், 4) திரு.K.குருசாமி, தட்டச்சர்,(பி-2 இருக்கை) 5) திருமதி.J.கிறஸ்டின் சுதா, தட்டச்சர். (பி-1 இருக்கை) 6) திரு.S.ராஜதுரை, இளநிலை உதவியாளர், (எ-3 இருக்கை) ஆகியோர்கள் ஆஜரில் இருந்தார்கள். மற்றும் Bondon Company ஒப்பந்த அலுவலர்களின் வருகை பதிவேட்டை பார்வையிட்டதில் திரு.து.ஜாண் லூயிஸ் 2) திரு.M.ராஜகுமார் 3) திருமதி.P.அபிஷா ஆகியோர்கள் ஆஜரில் இருந்தார்கள். பின்பு நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலெட்சுமி அவர்களை சோதனை செய்த போது அவருடைய கைப்பையில் ரூ.600/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி கேட்டபோது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், காலை அலுவலகம் வரும் போது அதற்கான அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதனை மேற்படி அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் பணம் ரூ.600/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது அலுவலக அறையை சோதனை செய்த போது பணம் ஏதும் காணப்படவில்லை. அதன் பின் கணக்கர் அறையில் அமர்ந்திருந்த திரு. S.சிவனாறுமுகம் அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.680/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி கேட்டபோது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், காலை அலுவலகம் வரும் போது அதற்கான அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதனை மேற்படி அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் பணம் ரூ.680/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது அலுவலக அறை சோதனை செய்தப்பட்டது. அந்த அறையிலிருந்த ஸ்டீல் பிரோவை சோதனை செய்த போது ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அதை எடுத்து எண்ணிபார்த்த போது ரூ.12,800/-இருந்தது. மேலும் அந்த பிரோவின் சிறிய அறையில் ரூபாய் நோட்டுகள் காணப்பட்ட ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.12,800/-இருந்தது. இது குறித்து அவரிடம் கேட்டபோது 28.10.2021 மற்றும் இன்றைய கொடிநாள் வசூல் தொகை என்றும், அதை வங்கியில் வரவோலையாக எடுத்து நாகர்கோவிலுள்ள முன்னாள் படைவீரர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு வைத்திருப்பதாகவும் கூறினார். இதனை தொடர்ந்து கொடிநாள் வசூல் ரசீதின் Counterfoil மற்றும் பதிவேடை ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் அந்த தொகை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவருடைய அலுவலக அறையை சோதனை செய்த போது வேறு பணம் காணப்படவில்லை. இதை தொடர்ந்த கண்காணிப்பாளர் அறையை சோதனை செய்யப்பட்டது. கண்காணிப்பாளர் திருமதி.S. வெள்ளைத்துரைச்சி மற்றும் திருமதி. கலா நாராயணன் ஆகியோர்கள் விடுப்பில் உள்ளதாக தெரிகின்றது. அந்த அறையை சோதனை செய்த போது பணம் காணப்படவில்லை. அதை தொடர்ந்து பி பிரிவு அறையை சோதனை செய்த போது அங்கு

B3 இருக்கையை அறையை சோதனை செய்த போது திரு.குருசாமி அவர்கள் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.1,200/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி கேட்டப்போது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், காலை அலுவலகம் வரும் போது அதற்கான அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதனை மேற்படி அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் பணம் ரூ.1,200/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் B1 இருக்கையை அறையை சோதனை செய்த போது திருமதி.கிறிஸ்டின் சுதா அவர்கள் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.650/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி கேட்டப்போது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், காலை அலுவலகம் வரும் போது அதற்கான அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதனை மேற்படி அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் பணம் ரூ.650/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையை சோதனை செய்த போது வேறு பணம் ஏதும் காணப்படவில்லை. அதை தொடர்ந்த A பிரிவு அறையை சோதனை செய்த போது திரு. S.ராஜதுரை, A4 இளநிலை உதவியாளர் அவர்கள் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.1,120/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி கேட்டப்போது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், காலை அலுவலகம் வரும் போது அதற்கான அலுவலக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். அதனை மேற்படி அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாகயிருந்ததால் பணம் ரூ.1,120/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையை சோதனை செய்த போது வேறு பணம் ஏதும் காணப்படவில்லை. அதை தொடர்ந்த புகைப்படம் எடுக்கும் அறையை சோதனை செய்த போது திரு.ஜான் லூயிஸ், திரு.ராஜகுமார் என்பவரும் திருமதி.அபிஷாவும் அமர்ந்திருந்தார்கள். இவர்களை சோதனை செய்தபோது திரு.ஜான் லூயிஸ் என்பவர் வைத்திருந்த அவருடைய Bag-ல் ரூ.3,150/- காணப்பட்டது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தனது கை செலவுக்காக வைத்திருப்பதாகவும், நாங்கள் Bonton Company ஒப்பந்த பணியாளர்கள் என்றும் தங்களுக்கு என்று தனியாக பணியாளர்களின் பண கையிருப்பு பதிவேடு இல்லை என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுகொள்ள கூடியதாக இல்லாததால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மற்ற இருவரிடமும் பணம் எதுவும் காணப்படவில்லை. மேலும் ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்ததின் பேரில் வந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.பத்மபிரியா அவர்கள் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையை திறந்து பார்த்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறையும் இருந்தது. இரு அறைகளையும், மோட்டார் வாகன ஆய்வாளரையும் சோதனை செய்த போது பணம் ஏதும் காணப்படவில்லை. இதை தொடர்ந்து ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வடக்கு பக்கம் உள்ள திரு.ஜான் என்பவருக்கு சொந்தமான காம்பளக்ஸில் உள்ள சிறிய சந்தில் உள்ள 3 கடைகளில் கிழக்கு பார்த்த முதல் கடையை சோதனை செய்த போது புரோக்கர் திரு.ஆன்றோ சகாய ஜெபின் என்பவர் அங்கிருந்தார். அவரிடம் விசாரித்த போது அவர் RTO அலுவலக பணிகளுக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணதொகையை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று Online மூலம் செலுத்தி அதற்கான ரசீதை வாடிக்கையாளரிடம் கொடுப்பேன் என்று தெரிவித்தார். அவரது அறையை சோதனை செய்த போது அறையிலிருந்த மேஜை வலது பக்க டிராயரில் ரூ. 39,410/- இருந்தது இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது இன்றைய தினம் வாடிக்கையாளருக்கு LLR, Diriving Licence மற்றும் Licence புதுபித்தல் சம்மந்தமாக அரசுக்கு Online மூலம் நான் செலுத்திய கட்டணத்தை வாடிக்கையாரிடமிருந்து பெற்று வைத்திருப்பதாக தெரிவித்தார். அதன்படி இன்றைய தினம் அவரது SBI, IOB, Central Bank ஆகிய வங்கி கணக்கிலிருந்து அவர் மூலம் Account Statement எடுத்து பார்த்த போது RTO அலுவலகம் சம்மந்தமாக இன்றைய தினம் ரூ. 7,910/- மட்டும் Debit ஆன விவரம் உள்ளது. மீதி தொகை ரூ. 31,500/- பற்றி கேட்டபோது அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததாலும் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படி அவர் வாடிக்கையாளரிடமிருந்து வசூல் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திலுள்ள அலுவலர்களுக்கு கொடுக்கும் நபர் என்பதால் அந்த லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அந்த ரூபாய் 31,500/- மற்றும் வங்கி Account Statements நகல்கள் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த வேறொரு மேஜையின் கீழ் ஒரு Bag

காணப்பட்டது. இது பற்றி திரு.ஆன்றோ சகாய ஜெபின் என்பவரிடம் கேட்டபோது எனது அலுவலகத்திற்கு வழக்கமாக வரும் குலசேகரத்திலுள்ள பேதூரு ஒட்டுநர் பயிற்சியில் பணிபுரியும் திரு.ராஜேஷ் என்பவரது BAG என தெரிவித்தார். அதனை எடுத்து சோதனை செய்த போது TN 74 Z 0950, TN 74 Y 5986, TN 74 Y 3738, TN 38 AD 6999 என்ற வாகனங்களின் அசல் RC Book, வரி கட்டிய ரசீதுகள் காணப்பட்டது. அதில் TN 74 Z 0950 என்ற வாகனத்தின் RC Book கோப்பிலுள்ள 27.07.2020 நாளிட்ட வரி கட்டிய ரசீதில் பேதூரு ஒட்டுநர் பயிற்சியில் உள்ள முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. இந்த அசல் RC புத்தகங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த Bag ல் உள்ள மற்ற அறைகளை சோதனை செய்த போது ஒரு அறையில் பச்சை மற்றும் நீல கலரில் ஒரு ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அதை எடுத்து பார்த்த போது அதில் Assist. Registering Authority, Marthandam என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தது. இது RTO அலுவலக முத்திரை தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து மேற்படி காம்பளக்ஸின் பக்கத்திலுள்ள திரு.ஜான் என்பவருக்கு சொந்தமான மற்றொரு காம்பளக்ஸில் உள்ள சிறிய சந்தில் அமைந்துள்ள 3 கடைகளில் கிழக்கு பார்த்த 2 வது கடை எண். 27 ஐ சோதனை செய்ய சென்ற போது அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திருமதி.S.ஷைலா என்றும் தான் இந்த கடையில் Online -ல் RTO அலுவலக பணிகளுக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணதொகையை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று Online மூலம் செலுத்தி அதற்கான ரசீதை வாடிக்கையாளரிடம் கொடுப்பேன் என்றும் இந்த கடையின் உரிமையாளர் பெயர் திரு.S.செந்தில் என்றும் தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்த போது அறையிலிருந்த மேஜையின் வலது பக்க டிராயரில் ரூ.34,500/- இருந்தது இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது இன்றைய தினம் வாடிக்கையாளருக்கு RTO அலுவலக பணிகளுக்கு அரசுக்கு செலுத்திய கட்டணதொகையை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இன்றைய தேதியில் Online ல் செலுத்திய தொகை விபர வங்கி Statement ஐ கேட்ட போது Statement எடுக்க வேண்டுமெனில் உரிமையாளர் அலைபேசியில் தான் OTP வரும் என தெரிவித்து உரிமையாளரின் அலைபேசி எண்.9442653030 என்ற எண்ணை தொடர்பு கொண்ட போது அந்த எண் Switch off - ல் இருந்த படியால் Debit Statement எடுக்க முடியாது என்றும் தெரிவித்தார். மேலும் மேற்படி தொகைக்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததாலும் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படி அவர் வாடிக்கையாளரிடமிருந்து பணம் வசூல் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திலுள்ள அலுவலர்களுக்கு கொடுக்கும் நபர் என்பதால் அந்த பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அந்த ரூபாய் 34,500/- விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த வேறொரு மேஜையின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த RC-புத்தகங்கள் 1) TN74D2842, 2) TN75V3781, 3)TN75D4781, 4) TN69AW8889 ஆகியவற்றை பற்றி கேட்ட போது எங்கள் அலுவலகத்திற்கு வழக்கமாக வரும் பள்ளியாடியை சேர்ந்த செல்வா ஒட்டுநர் பயிற்சி பள்ளி, இரவிபுதூர்கடையில் பணிபுரியும் திரு. ரூபன் என்பவர் வைத்து சென்றதாக தெரிவித்தார். மேற்படி அசல் RC-புத்தகங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்த போது நீல கலரில் ஒரு ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அதை எடுத்து பார்த்த போது V.PADMAPRIYA, Motor Vehicle Inspector GR-1, Regional Transport Office, Marthandam என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தது. இது RTO அலுவலக முத்திரை தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து அதே காம்பளக்ஸின் அமைந்துள்ள 3 கடைகளில் கிழக்கு பார்த்த 3- வது கடை எண். 36- ஐ சோதனை செய்ய சென்ற போது கடை பூட்டப்பட்ட நிலையில் இருந்ததால் அருகிலுள்ள மேற்படி ஷைலா அவர்களிடம் கேட்டபோது அந்த கடையின் உரிமையாளர் திரு.வடிவேல் என்றும் அவர் வெளியே செல்லும்போது அவருடைய கடையின் சாவியை என்னிடம் கொடுத்து செல்வார் என்றும் தெரிவித்தார். அவரிடம் மேற்படி வடிவேலை அவருடைய அலைபேசியில் தொடர்பு கொண்டு வரச்சொன்ன போது அவருடைய அலைபேசி Switch Off-ல் இருப்பதாக தெரிவித்தார். மேலும் கடையை சோதனை செய்ய வேண்டுமென்றால் சாவி என்னிடம்தான் உள்ளது என்று கூறியதால் திருமதி.ஷைலா அவர்கள் மூலம் மேற்படி கடையை திறந்து சோதனை செய்த போது அந்த அறையில் இருந்த மேஜையின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பார்வையிட்டதில் 1) ந.க.எண்.023388/A3/2021–ன்படி அருணாச்சலா கல்லூரி கொரானா

தொற்று காரணமாக கல்லூரிகள் திறக்கபடாததால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டது தொடர்பான ஆய்வாளரின் களப்பணி ஆய்வு செய்து RTO கேட்ட கடிதம் மற்றும் அது சம்மந்தப்பட்ட கோப்பு. 2) ந.க.எண்.023388/A3/2021–ன்படி அருணாச்சல பள்ளியில் கொரானா தொற்று காரணமாக கல்லூரிகள் திறக்கபடாததால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டது தொடர்பான ஆய்வாளரின் களப்பணி ஆய்வு செய்து RTO கேட்ட கடிதம் மற்றும் அது சம்மந்தப்பட்ட கோப்பு. 3) சாலை பாதுகாப்புக்குழு கூட்டம் ஆகஸ்ட்-2021 இடம்-மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில் நாள்:13.08.2021 நேரம் காலை 9.30 மணி என குறிப்பிடப்பட்ட ஆவணம். 4) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மார்த்தாணம். குறிப்பாணை எண.021016/B1/2021 நாள் 29.04.2021 என்ற குறிப்பாணை. 5) Government of Tamil Nadu, Transport Deparment Vehicle Inspection Record –என்ற மூன்று புத்தகம். 6) விபத்து வாகனம் a) TN74S6591, b)TN74U0018 c)TN74AQ0203, d)TN75AJ6043, e) TN75V9523 ஆகிய வாகனங்களை ஆய்வு செய்ய வேண்டிய விண்ணப்பம் f) Government of Tamil Nadu, Transport Deparment –Accident Study Report. 7) வட்டார போக்குவரத்து அலுவலகம், மார்த்தாண்டம் குறிப்பாணை எண்.26760-,3-2021 நாள்.13.07.2021 தேதியிட்ட கடிதம். 8) Accident Particulars for the month of September-2020. பதிவேடு. 9) வட்டார போக்குவரத்து அலுவலகம், மார்த்தாண்டம், குறிப்பாணை எண்.21467/B1/2021 நாள் 07.06.2021 தேதியிட்ட கடிதம். 10) விபத்து வாகனம் ஆய்வு செய்ய வேண்டிய விண்ணப்பம் மற்றும் அறிக்கை 1 to 26 அடங்கிய கோப்பு. 11) விபத்து வாகனம் ஆய்வு செய்ய வேண்டிய விண்ணப்பம் மற்றும் அறிக்கைகள் 51 to 96, dated 17.03.2021 to 31.03.2021 அடங்கிய கோப்பு. 12) ஜென்ஸி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி புதிய பயிற்சி வகுப்பு வாகனத்தை சேர்க்க கேட்டல் தொடர்பான குறிப்பானை எண்.030476/A2/2020 நாள்.28.09.2020 தொடர்பான கோப்பு ஆகியவை காணப்பட்டது. 13) ஓட்டாமல் நிறுத்திக் கொள்வதற்கு வைக்கப்பட்டிருந்த வாகனம் RC-புத்தகங்கள் 1) TN74D2842, 2) TN75V3781, 3)TN75D4781, 4) TN69AW8889 ஆகியவற்றை பற்றி கேட்ட போது எங்கள் அலுவலகத்திற்கு வழக்கமாக வரும் பள்ளியாடியை சேர்ந்த செல்வா ஒட்டுநர் பயிற்சி பள்ளி, இரவிபுதூர்கடையில் பணிபுரியும் திரு.ரூபன் என்பவர் வைத்து சென்றதாக தெரிவித்தார். மேற்படி அசல் RC-புத்தகங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்த போது நீல கலரில் ஒரு ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அதை எடுத்து பார்த்த போது V.PADMAPRIYA, Motor Vehicle Inspector GR-1, Regional Transport Office, Marthandam என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தது. இது RTO அலுவலக முத்திரை தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இவற்றை பற்றி திருமதி.ஷைலாவிடம் கேட்ட போது அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. வடிவேலுவிடம் தான் கேட்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் அந்த மேஜையின் டிராயரில் பச்சை மற்றும் சிவப்பு கலரில் ஒரு ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அதை எடுத்து பார்த்த போது V.Padmapriya, Motor Vehicle Inspector Gr-I, Regional Transport Officer, Marthandam என பொறிக்கப்பட்டிருந்தது. இது RTO அலுவலக முத்திரை தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து அதே காம்பிளக்ஸின் அமைந்துள்ள 3 கடைகளில் கிழக்கு பார்த்த முதலாவது கடைஎண். 9- ஐ சோதனை செய்ய சென்ற போது அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.செல்லதுரை என்றும், நான் இந்த கடையில் கடந்த 10 வருடமாக வேலைபார்த்து வருவதாகவும், கடையின் உரிமையாளர் திரு.R.ஜான் என்றும் தெரிவித்தார். அந்த கடையை சோதனை செய்த போது கடையிலிருந்த மேஜையின் வலது பக்க டிராயரில் ரூ.16,600/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தனது உரிமையாளரின் வாகனத்திற்கு வரி செலுத்த வைத்திருப்பதாக தெரிவித்தார். 1) R.No.59059/A3/2015 – TN57H1931 –Mini Bus-Submitted to Regional Transport Authority, Marthandam- Renewal of Permit அடங்கிய கோப்பு. 2) R.NO.33217/A2/2020 – TN27F2612 - Renewal of Permit 3) R.NO.12875/B1/2020 – TN74Y3083 - Renewal of Permit 4) R.NO.39081/B1/2020 – TN65B9699 - Renewal of Permit 5) R.NO.042210/B1/2020 – TN69B5527- Renewal of Permit 6) R.NO.44633/B1/2020 – TN74Y2234 - Renewal of Permit 7)

R.NO.47674/B1/2020 – TN33N0090 - Renewal of Permit 8) R.NO.36431/B2/2021 – TN74Y3018 - Renewal of Permit 9) R.NO.26527/B2/2021 – TN69B4343 - Renewal of Permit 10) Mini Bus TN33N0090 வாகனத்தின் மீதான குற்றங்களுக்காக தணிக்கை வழங்கியது ந.க.எண்.74676/இ1/2020 அடங்கிய கோப்பு 11) Mini Bus TN33N0090 வாகனத்தின் மீதான குற்றங்களுக்காக தணிக்கை வழங்கியது ந.க.எண்.21638/இ1/2020 அடங்கிய கோப்பு 12) Mini Bus TN33N0090 வாகனத்தின் மீதான குற்றங்களுக்காக தணிக்கை வழங்கியது ந.க.எண்.10423/இ1/2020 அடங்கிய கோப்பு 13) TAE7979 என்ற Mini Bus க்கு Permit ஆகியவை காணப்பட்டது. இதுபற்றி திரு.செல்லதுரை அவர்களிடம் கேட்டபோது Permit Type செய்ய RTO அலுவலகத்திலிருந்து தந்த பைல் என தெரிவித்தார். மேலும் மேற்படி தொகைக்கும் அவரது அலுவலகத்திலிருந்த RTO அலுவலக கோப்புகள் பற்றி அவர் கூறிய விளக்கம் ஏற்றுகொள்ள கூடியதாக இல்லாததாலும் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படி அவர் வாடிக்கையாளரிடமிருந்து பணம் வசூல் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திலுள்ள அலுவலர்களுக்கு கொடுக்கும் நபர் என்பதால் அந்த பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அந்த ரூபாய் 16,600/- மற்றும் மேற்படி 13 ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து RTO அலுவலகத்தின் முன்பு கோழிபோர்விளை இருந்து முளகுமூடு செல்லும் சாலையில் வலது பக்கமுள்ள சந்தில் கடைசியாக அமைந்துள்ள கிழக்கு பார்த்த கடையை சோதனை செய்ய சென்ற போது அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.G.ஜான் கென்னடி என்றும் இந்த கடையின் உரிமையாளர் தனது தம்பி திரு.G.செல்வன் என்றும், அவர் வட்டம் என்ற ஊரில் கதிர் ஒட்டுநர் பயிற்சி பள்ளி நடத்தி வருவததாகவும் தெரிவித்தார். மேலும் ஒட்டுநர் பயிற்சி பள்ளியிலிருந்து வரும் RTO அலுவலக சம்மந்தமான வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அந்த அறையை சோதனை செய்த போது அங்கிருந்த மேஜையின் மீது வாகனம் TN74W4741 மற்றும் TN74L4461 ஆகியவற்றின் RC Book காணப்பட்டது. அதை பற்றி திரு.செல்லதுரையிடம் கேட்ட போது இந்த RC Book க்கு விவேகானந்தா பள்ளியிலுள்ள வாகனத்திற்குரியது என்றும், COVID-19 காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திற்கு வரி குறைவு செய்து RTO அலுவலக வேலை முடித்து உரிமையாளரிடம் கொடுக்க வைத்தது என்று கூறினார். எனவே அந்த RC Book கள் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையிலிருந்த அலமாரியை சோதனை செய்த போது வாகனம் GA06.H.9334 என்ற வாகனத்திற்கு Re-Registration செய்ய RTO அலுவலகத்திலுள்ள அசல் கோப்பு மற்றும் கதிர் ஒட்டுநர் பயிற்சி பள்ளியிலுள்ள பயிற்சி வாகனத்தை மாற்றுவதற்கு RTO அலுவலகத்திற்கு கொடுத்த அசல் கோப்பு ஆகியவை காணப்பட்டது. இவற்றை பற்றி கேட்ட போது எனக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்றும் எனது தம்பிக்கு தான் தெரியும் என்று தெரிவித்தார். இந்த RTO அலுவல ஆவணங்கள் தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து மேற்படி கடையின் அருகில் தெற்கு பக்கமுள்ள கிழக்கு பார்த்த கடையை சோதனை செய்ய சென்ற போது அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு. T.பிரபு என்றும், தனக்கு தெரிந்த நபர்களின் வாகனங்களுக்கு RTO அலுவலகத்திலுள்ள சிறுசிறு வேலைகளை செய்து கொடுப்பதாகவும் இது சம்மந்தமாக மார்த்தாண்டம் RTO அலுவலகம் வரும் போது மதன் மற்றும் சில பேர் சேர்ந்து வைத்துள்ள RTO அலுவலக வேலைகளுக்கு Online –ல் கட்டணம் செலுத்தும் அலுவலகத்திற்கு வருவதாகவும் தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்த போது அங்கிருந்த மேஜையின் மீது இருந்த கோப்புகளை தணிக்கை செய்த போது 1) RC.No.046049/A4/2021 என்ற புதிய வாகனபதிவு அசல் கோப்பு 2) KL576164 என்ற வாகனத்தை மறு- பதிவு செய்ய 07.10.2021 அன்று RTO அலுவலகத்தில் 044050 எண்ணாக பதிவு செய்து கொடுக்கப்பட்ட அசல் கோப்பு 3) வாகனம் TN75Q7986 ன் Permit Sourender 08.10.2020 அன்று RTO அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட கோப்பின் அசல் ஆகியவை காணப்பட்டது. மேலும் அந்த மேஜையின் டிராயரில் ரூ.42,900/-மற்றும் RTO அலுவலகத்தில் பயன்படுத்த கூடிய 2 ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அவற்றை எடுத்து பார்த்ததில் ஒன்றில் RTO MARTHANDAM (TH-75 VAHAN-4 New Version New RC issued என்றும் மற்றொன்றில் SECRETARY Regional Transport Authority Marthandam என பொறிக்கப்பட்டிருந்தது. மேற்படி RTO அலுவலக கோப்பு, ரூ.42,900/-

மற்றும் 2 ரப்பர் ஸ்டாம்பு பற்றி கேட்ட போது அதை பற்றி எனக்கு தெரியாது. மதனிடம் தான் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்த RTO அலுவலகத்தில் பயன்படுத்த கூடிய முத்திரை மற்றும் ஆவணங்கள் தனியாருக்கு சொந்தமான அலுவலகத்தில் இருந்ததால் அதையும் ரூ.42,900/-ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதை தொடர்ந்து மேற்படி கடையின் அருகில் தெற்கு பக்கமுள்ள கிழக்கு பார்த்த முதலாவது கடையை சோதனை செய்ய சென்ற போது அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.T.S.தினேஷ் என்றும், அவர் RTO அலுவலக பணிகளுக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணதொகையை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று Online மூலம் செலுத்தி அதற்கான ரசீதை வாடிக்கையாளரிடம் கொடுப்பேன் என்று தெரிவித்தார். அவரது அறையை சோதனை செய்த போது அறையிலிருந்த மேஜை வலது பக்க டிராயரில் ரூ. 57,960/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது இன்றைய தினம் வாடிக்கையாளருக்கு RTO அலுவலக பணிகளுக்கு Online –ல் அரசுக்கு செலுத்திய கட்டணதொகையை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று வைத்துள்ளதாக தெரிவித்தார். இன்றைய தினம் செலுத்திய கட்டண விபர வங்கி Statement ஐ கேட்ட போது சரியான விளக்கம் சொல்லாததாலும் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின் படி அவர் வாடிக்கையாளரிடமிருந்து பணம் வசூல் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திலுள்ள அலுவலர்களுக்கு கொடுக்கும் நபர் என்பதால் அந்த பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அந்த ரூபாய் 57,960/- விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் அவரது அதே மேஜையின் மேல் வைத்திருந்த ஆவணங்களை சோதனை செய்த போது வாகனம் 1) TN74V5170 என்ற வாகனத்திற்கு Duplicate RC கேட்டு 06.10.2021 அன்று 043574 எண்ணாக பதிவு செய்யப்பட்ட RTO அலுவலகத்திலுள்ள அசல் கோப்பு. 2) TN74AS7250 புதிய Permit கேட்ட அசல் கோப்பு. 3) TN69AV0696 Permit புதுபித்தல் சம்மந்தமான அசல் கோப்பு. 4) TN76W1868 வாகனத்தின் Permit Sourender செய்ய RTO அலுவலகத்திலுள்ள அசல் கோப்பு 5) Duplicate DL கேட்டு அபிஷேக் என்பவர் 06.09.2021 அன்று 038628 எண்ணாக விண்ணப்பித்த அசல் கோப்பு ஆகியவை காணப்பட்டது. இவற்றை பற்றி திரு.தினேஷ் என்பவரிடம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காகதாலும் அரசு அலுவலக கோப்புகள் தனியார் அலுவலகத்தில் இருந்ததால் அவற்றையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே டிராயரில் சிவப்பு நிற ரப்பர் ஸ்டாம்பு காணப்பட்டது. அதை எடுத்து பார்த்த போது ASSISTANT REGISTERING AUTHORITY MARTHANDAM என பொறிக்கப்பட்டிருந்தது. இது பற்றி கேட்ட போது RTO அலுவலக கோப்புகளில் முத்திரை வைப்பதற்காக முன்பு பயன்படுத்தியதாக தெரிவித்தார். இந்த முத்திரை RTO அலுவலத்தில் பயன்படுத்தும் முத்திரை தனியார் அலுவலகத்தில் இருந்ததால் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் இந்த பணம் மோட்டார் வாகன ஆய்வாருக்கு வாகன உரிமையாளர்கள் மற்றும் புரோக்கர்கள் அந்தஅந்த வேலைகளை செய்து கொடுப்பதற்கு லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி மொத்தம் ரூ.1,86,610/- மற்றும் தனி நபர் வைத்திருந்த மேற்படி கோப்புகளையும் இந்த செயல் முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. புரோக்கர்களின் அலுவலகங்களிலிருந்து சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினால் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம், RTO அலுவலக அசல் கோப்புகள் மற்றும் RTO அலுவலகதில் பயன்படுத்தப்படும் முத்திரைகள் கைப்பற்றப்பட்டதை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.பத்மபிரியா மற்றும் RTO நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலெட்சுமி ஆகியோர்களிடம் விசாரித்தபோது அது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர். இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் இன்று 30.10.2021-ம் தேதி அதிகாலை 04.15 மணிக்கு முடிக்கப்பட்டது.

The original FIR along with the complaint Proceedings, Seized amount Rs.1,86,610/- and the Staetment of suspect officers sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Nagercoil for the trail of offences under PC Act cases and the copies sent to the concerned officers.

30

(PETER PAUL
DSP, VAC,
Nager...